# BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# கோவிட் -19 (COVID-19) தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார பின்னடைவிலிருந்து மீள்வதற்காகவும் வணிகர்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் ப்ராம்ப்ட்டன் மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே13, 2020) – உள்ளூர் பொருளாதாரத்திற்கான பணிகளை மீண்டும் துவக்குவதன் மூலம் நகருக்கான கட்டமைப்பை முன் நோக்கி நகர்த்த, ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதார மீட்புக்கான யுக்திக்கு, மாநகர மன்றம் இன்றைக்கு ஆமோதிப்பு செய்தது.

**சிறுவணிகங்களுக்கான ஆலோசனை**

ப்ராம்ப்ட்டன் நகரின் சிறு வணிகர்களைக் கொண்ட சமுதாயத்தில், கோவிட் -19 (COVID-19) தொற்று ஏற்படுத்திய வருவாய் இழப்பு, மற்றும் கடைகள் போன்ற வணிக இடங்களில் இருந்து காலி செய்யச் சொல்லுதல், உள்ளிட்ட பாதிப்புக்களை சமாளிக்கும் விதமாக நமது மேயர் ப்ரவுன் அவர்கள் பிரதேச அரசிடம் ஒரு கடிதம் சமர்ப்பித்திருக்கிறார்; இப்படி காலி செய்யச் சொல்லி மிரட்டப்படுவதற்கு தற்காலிகமாக தடை விதிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. , கனடா நாட்டு அவசரநிலை காலத்தில் வணிக வாடகைக்கான உதவித் திட்டத்திற்கான [Canada Emergency Commercial Rent Assistance (CECRA) program] ஒப்புதலுக்காக காத்திருக்கின்ற வணிக சமூகத்தினருக்கு, இந்தக் குறுகிய கால தீர்வானது, சற்று நிம்மதிப் பெருமூச்சு விட வழி வகுக்கும்.

இந்த சவாலான நேரத்தில், ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற கட்டிட சொந்தக்காரர்கள் வாடகைதாரர்களுடன் இணைந்து வாடகை செலுத்துவதற்கான திட்ட பலன்களுக்காக, CECRA -வுக்கு விண்ணப்பித்து, வாடகைதாரர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என நகர நிர்வாகம் ஆலோசனை கூறுகிறது.

**பொருளாதார மீட்புக்கான யுக்தி**

பொருளாதார மீட்புக்கான யுக்தி என்பது மேயரின் கோவிட் -19 (COVID-19)பொருளாதார ஆதரவுக்கான பணிப்படையினால் வழிகாட்டப்படுகிறது; இந்த பணிப்படைக்கு இணைத்தலைவராக இருப்பவர்கள் பிராந்திய கவுன்சிலர்களாகிய மைக்கேல் பல்லேஸ்கி மற்றும் பால் வின்செண்ட் ஆகியோராவர்; இந்த பணிப்படையானது, கோவிட் 19 (COVID-19) தொற்றுப்பரவல் காலத்தில் ப்ராம்ப்ட்டன் நகரில் நிவாரண முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கான பரிந்துரைகள் மற்றும் அவற்றைச் செயல்படுத்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பணியாற்றுகிறது. இந்தப் பணிப்படையானது, பிரதேச மற்றும் கூட்டு அரசாங்கங்களில் இருந்து, ப்ராம்ப்ட்டன் வர்த்தக வாரியத்திலிருந்து, டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA விலிருந்து,

மற்றும் வர்த்தக கழகம் ஆகியவற்றிலிருந்து உறுப்பினர்கள் மற்றும் அத்துடன் ப்ராம்ப்ட்டன் வர்த்தக சமுதாயத்தில் இருந்து பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டிருக்கிறது.

பொருளாதார மீட்புக்கான யுக்தியானது, முன்னோக்கி நகரவிருக்கின்ற ப்ராம்ப்ட்டன் நகர பொருளாதாரத்திற்கு, வளைந்து கொடுக்கும் தன்மை மற்றும் போட்டியை சமாளித்தல் ஆகியவற்றின் பலன்களைத் தரும். யுக்தியின் நான்கு தூண்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில், உடனடியான மற்றும் நீண்ட காலம் செய்யவிருக்கின்ற செயல்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இந்த இலக்குகளை அடையலாம். இந்த நான்கு தூண்கள் மற்றும் உடனடி செயல்பாடுகள் பின்வருமாறு:

- **புதுமை படைத்தல், தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனையும் தன்மை**
  தொழில்நுட்ப மாற்றத்துக்கும் புதுமை படைத்தலுக்கும் முழுமையாக இசைவு கொடுத்தல்,மற்றும் தொழில்முனையும் தன்மை ஆகியவற்றை உபயோகித்துக்கொள்ளுதல்; இது ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோருக்கான மையம் அளிக்கும் சலுகைகளின் விரிவாக்கம் மூலமாக செய்யப்படும்; மற்றும் டவுண்டவுன் புதுமை படைக்கும் மாவட்டத்தை அதிகாரபூர்வமாக துவக்கி வளர்த்தல் மூலமாகவும் செய்யப்படும்
- **முதலீடு**
  முதலீட்டை ஈர்த்து தக்க வைப்பதற்கான சந்தர்ப்பங்களை கவர்ந்து கொள்ளுதல்; இதில் “உள்ளூருக்கே ஆதரவு தரவும்” பிரச்சாரம் மற்றும் நிஜம் போலவே தோற்றம் தருகின்ற அன்னிய நேரடி முதலீட்டு செயல்திட்டங்களைத் துவக்குவதும் அடங்கும்.
- **உள்கட்டமைப்பு**
  உள்கட்டமைப்புப் திட்டப்பணிகளைத் துரிதப்படுத்தல், இதில் அல்கோமா பலகலைக்கழக விரிவாக்கமும் அடங்கும்
- **கலைகள், கலாச்சாரம் மற்றும் சுற்றுலா**
  கலைகள் மற்றும் கலாச்சாரப் பிரிவுக்கான எதிர்கால கலாச்சார ஈடுபாடு மற்றும் ஆதரவு பற்றிய நகர நிர்வாகத்தின் கற்பனைக்கு வடிவம் கொடுக்க, டிஜிட்டல் ரீதியான புதுமை படைத்தலை நோக்கி தொடர்ந்து செல்லுதல். உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களில், நிஜம் போல தோற்றமளிக்கின்ற வகையிலான கலைகளைக் கற்பிக்கும் பணி, செயல் நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்நேர நடவடிக்கைகள்.

செயல்பாடுகள் நடைமுறைக்கு வந்து, அவை மதிப்பாய்வு செய்யப்பட்டுக்கொண்டே இருக்கையில், காலப்போக்கில் இந்த யுக்தி உருப்பெறும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ கோவிட் -19 (COVID-19) தொற்றுப் பரவலானது, உலகம் முழுவதும் உண்டாக்கியது போலவே, பிராம்ப்டன் வணிகங்களையும் பொருளாதார ரீதியாக புரட்டிப்போட்ட அலையாக உள்ளது. நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாம் திட்டமிட்டுள்ளதால் நமது வணிக சமூகத்திற்காக நாம் தொடர்ந்து வாதிடுகிறோம். உள்ளூர் வணிகங்களுக்கு உரிய

நேரத்தில் ஆதரவை வழங்கி வரும் போதே பொருளாதார ஆதரவு பணிக்குழுவானது, மீட்புக்கும் கவனம் செலுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்; எனவே நமது பொருளாதாரத்தை மறுதொடக்கம் செய்யவும், நமது வணிகங்களை விரைவில் மீட்டெடுக்கவும் நாம் தயாராக உள்ளோம்."

*- பேட்ரிக் ப்ரவுன் , மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" நமது வணிக சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கும், சாத்தியமான தீர்வுகளை அடைவதில் நம்முடன் பணியாற்றுவதற்கும், நம்முடன் பொருளாதார ஆதரவு பணிக்குழு பட்டியலில், அமைச்சர் சர்காரியா அவர்களும் மற்றும் எம்.பி. கேரா அவர்களும் உட்பட பலரும் இருப்பது நமக்கு அதிர்ஷ்டமே ஆகும். இந்த நெருக்கடியிலிருந்து நாம் வெளிவருவதற்காக, நமது வணிக சமூகத்தை ஆதரிப்பதற்கும் நமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் நாம் ஒன்றிணைந்திருக்கிறோம். நாம் உண்மையிலேயே ஒன்றாகவும் வலுவாகவும் இருக்கிறோம், இந்தக் கடினமான சூழலை நாம் ஒன்றாக இணைந்து கடப்போம்."

*- மைக்கேல் பல்லேஸ்கி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; இணை தலைவர், பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

" கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் தொடங்கியதிலிருந்தே நாங்கள் எங்கள் வணிக சமூகத்துடன் களத்தில் இருந்திருக்கிறோம், அவர்களைச் சந்தித்தோம், அவர்களுக்காக வாதிட்டோம், எங்களால் முடிந்த எல்லா வகையிலும் அவர்களுக்கு ஆதரவளித்தோம். இப்போதும், எதிர்காலத்திலும், அவர்களை ஆதரிக்கும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், இந்த நெருக்கடியிலிருந்து வலுவாகவும் மற்றும் நெகிழ்வான தன்மையுடனும் மீண்டு வருவதில் அவர்களுக்கு உதவுவதற்காகவே நாங்கள் காத்திருக்கிறோம்."

*- பால் வின்செண்ட்,* பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் *1 & 5; இணை தலைவர், பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

"நமது உள்ளூர் வணிகங்களை ஆதரிப்பதற்காக நமது ஊழியர்கள் நகரத்தின் கோவிட் -19 (COVID-19) பணிக்குழு உறுப்பினர்களுடன் அயராது உழைத்து வருகின்றனர்; அதே நேரத்தில் அவர்களின் எதிர்கால வளர்ச்சியையும் வெற்றிகளையும் ஊக்குவித்து, உதவக் காத்திருக்கிறார்கள். கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலைச் சமாளிப்பதற்கு பலவிஷயங்களும் அடங்கிய முழுமையான ஒரு செயல்திறன்மிக்க அணுகுமுறையை நகரம் எடுத்து வருகிறது; இதில் நமது உள்ளூர் பொருளாதாரத்தின் பல துறைகளும் அடங்குகின்றன."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுதிரீதியான  தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca